In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.4 |
| Name: Sudhanprabu | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 15-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. A3, A5, A7, A8, A9 are present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல் வ.உ.சி. நகரில் வசிக்கிறேன். பஜாஜ் பைனான்சில் வேலை பார்த்து வருகிறேன். அசா1, 2, 3 ஆகியோர்களைத் தெரியும். காணொளி காட்சி மூலம் ஆஜர் எதிரி மற்றும் ஆஜரில் உள்ள ஆஜர் எதிரிகளைத் தெரியாது. சம்பவத்தில் இறந்தவர் பெயர் சரவணக்குமார். 20.07.2023ம் தேதி இரவு 8 மணிக்கு எனக்கு பெருமாள் என்ற என்ஜினியர் மற்றும் பாலாசி ஆகியோர் போன் செய்து சரவணக்குமாரை கொன்றுவிட்டார்கள் என்று என்னை சம்பவ இடத்திற்கு வரச்சொன்னார்கள். நான் விமலா ஆஸ்பத்திரி பக்கம் சென்றேன். அங்கு போய் நான் பார்த்தபோது சரவணன் அண்ணன் இறந்துகிடந்தார். அவருக்கு பின்மண்டையில் காயம் இருந்ததை பார்த்தேன். குப்புற படுத்து இறந்து கிடந்தார். அவரது குழந்தை அழுது கொண்டிருந்தது. அந்த குழந்தையை நான்தான் எடுத்துவந்து அண்ணன் சரவணன் வீட்டில் அவரது மனைவியிடம் கொடுத்தேன். பின்னர் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்றேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தபோது, பட்டறை சரவணன் எங்க வீட்டுக்கு பக்கத்து வீட்டில் வசிக்கிறார் என்றும், அவர் மீது 4 கொலை கேஸ்கள் இருக்கிறது என்றும், சுமார் 1 மாதம் முன்பு அல்லாசிக் யாரோ ஒரு சிறுவனுடன் ஆபாசமாக வீடியோகால் பேசியது சம்மந்தமான வீடியோவை வாட்ஸ்அப்பில் யாரோ வெளியிட்டதை பட்டறை சரவணன்தான் வெளியிட்டுள்ளதாக சொல்லி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி வருவதாக் கூறினார் என்றும், மேலும் கடந்த ஒருவார காலமாக என்னிடம் அல் ஆசிக் ஆட்கள் தனக்கு ரூட் போடுவதாகவும் அதனால் பயமான இருக்கு என்றும் சொன்னார் என்றும், நான் அவரிடம் பத்திரமாக இருங்கள் என்று சொன்னேன் என்றும், கடந்த 20.07.2023ம் தேதி எம்எஸ்பி பள்ளி அருகே உள்ள தைலக்காடு கிரவுண்டில் நான் எனது நண்பர்களான பாலாஜி, விக்னேஷ், தினேஷ், நிவேந்தன் மற்றும் சிலரும் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தபோது மாலை சுமார் 6.30 மணியளவில் பட்டறை சரவணன் அவரது மகனுடன் வந்து கிரிக்கெட் விளையாடிவிட்டு சுமார் 7.10 மணியளவில் அவரது மகனுடன் அவரது பைக்கில் சென்றார் என்றும், பாலாஜியின் வண்டியில் தினேஷ் ஏறிபோனார் என்றும் சுமார் 5 நிமிடத்தில் தினேஷ் எனக்கு போன் செய்து விமலா ஆஸ்பத்திரி பக்கத்தில வச்சு சரவணன் அண்ணன சிலர் வெட்டி கொன்னுட்டாங்க என்று சொன்னதும் நானும் எனது நண்பர்களும் அங்கு சென்று பார்த்தபோது சரவணன் அண்ணன் இறந்த நிலையில் குப்புற கிடந்தார் என்றும் அவரது பைக் கொஞ்சம் தள்ளி கிடந்தது என்றும், குழந்தையை தினேஷ் தூக்கி வைத்திருந்தான் என்றும் நான் சம்பவம் பற்றி விவரம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றும் பின்னர் குழந்தையை நான் வாங்கிக்கொண்டு சரவணன் வீட்டிற்கு சென்று அவரது மனைவி மற்றும் அம்மாவிடம் விவரம் சொல்லிவிட்டு குழந்தையை கொடுத்துவிட்டு வந்துவிட்டேன் என்று

சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**–வழக்கறிஞர்கள் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனக்கூறினார்கள்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.15 15:55:15 +0530

Principal District Judge,
Dindigul.